## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண்.74/2016

2025–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05–ம் நாள் புதன்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி P.ரங்கேஸ்வரி.,B.Sc.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, (முழு கூடுதல் பொறுப்பு) அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 05.03.2025 | கணவர் பெயர்: | முருகேசன் |
| பெயர்: | M.சுந்தராஜன் (எ) M.S.ராஜன் (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | கொள்ளிடம் தோப்பு தெரு | சமயம்: | |
| சாதி: | | வயது : | 60/2025 |
| தொழில்: | | | |

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி : 05.03.2025</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். இன்று வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

22.07.1989–ம் தேதியில் சீர்காழி கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்துக்கு நானும், முதல் எதிர்வாதி மற்றும் எனது தந்தை முருகேசன் எழுதிக்கொடுத்த அடமான கடன் பத்திரத்தின் **அசல் வா.சா.ஆ. 17 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** எனக்குகு எனது தகப்பனார் முருகேசன் கடந்த 1994, 1996 வருடங்களில் எழுதிய கடிதங்களின் அசல் (எண்ணிகை–4) தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.18 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணங்களை ஏற்று தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி ஏற்கனவே தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை இல்லை.